**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண்.120/2016**
**நாள் : 17/11/2022, வியாழக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - ரோஸ் | த/பெயர் - வெங்கடேசன் |
| வயது - | தொழில் - |
| விலாசம் - மேட்டுசுரபட்டு கிராம், பொன்னேரி. | |

**குறுக்கு விசாரணை (PW1)**

எனது சொத்தை பிரதிவாதி அபகரித்துவிட்டார் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது பூர்வீகம் மேட்டுசுரபட்டு கிராமம் தான். எனக்கு திருமணம் ஆகி சுமார் 37 வருடம் இருக்கும். தாவா சொத்து எனது தாயார் எனக்கு கொடுத்தது ஆகும். செட்டில்மென்ட் ஆவணம் மூலம் தாவா சொத்து எனக்கு வந்தது. எனது தாயாருக்கு அவருடைய தந்தை வழியாக வந்தது. எங்கள் தாத்தா எனது தாயாருக்கு உயில் மூலமாக சொத்தை எழுதி வைத்தார். உயில் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயில் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண்.67/2 ஆகும். மொத்த பரப்பளவு 12½ சென்டு ஆகும். எங்கள் இடத்திற்கு மேற்கு பக்கத்தில் பிரதிவாதியின் வீடு உள்ளது. தெற்கு பக்கம் சாலை உள்ளது. கிழக்கில் எங்களது உறவினர் இருக்கிறார். எலகப்பிள்ளை என்பது எனது தாத்தா பெயர். கிழக்கு பக்கத்தில் இருக்கும் நபர்களில் ஒருவர் பெயரும் எலகப்பிள்ளை தான். எனக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து பிரதிவாதி அங்கு தான் வசித்து வருகிறார். பிரதிவாதி எனது தாயாருக்கு அத்தை மகன் ஆவார். பிரதிவாதியின் வயது எவ்வளவு என்பது எனக்கு தெரியாது.

பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டால் எனக்கு தெரியாது. தங்களுடைய நிரூபணவாக்குமூலத்தில் பிரதிவாதி பதிலுரையில் கூறியுள்ள சங்கதிகளை குறிப்பிட்டுள்ளீர்கள் என்றும், அதை யார் சொன்னார்கள் என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி அவருடைய பதிலுரையில் 67/2 என்ற சர்வே எண் கொண்ட சொத்து அரசாங்கத்தினுடையது என்று குறிப்பிட்டுள்ளார் அந்த விவரம் தங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி அவருடைய சொத்து சர்வே எண்.67/3, 67/4 என்று கூறுகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 67/3க்கு அரசாங்கம் பிரதிவாதி பெயருக்கு பட்டா கொடுத்துள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணிற்கும், பிரதிவாதிக்கும் எந்த தொடர்பு இல்லை என்று பதிலுரையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை சர்வேயர் வைத்து அளப்பதற்கு முயற்சி செய்தீர்களா என்றால் இல்லை. பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரைக்கு பதில் ஏதேனும் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. செட்டில்மென்ட் ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணத்தையும் நீதினமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே அடிதடி தகராறு ஏற்பட்டு காவல் நிலையம் சென்றோம். காவல் நிலைய அறிவுறுத்தலின் படி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தோம். 26/11/2013ல் காவல் நிலையம் சென்று வந்த பிறகு தான் சட்ட அறிவிப்பை பிரதிவாதிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். சட்ட அறிவிப்பு நாங்கள் சொல்லி தான் அனுப்பப்பட்டது. நீங்கள் அனுப்பிய சட்ட அறிவிப்பில் பிரதிவாதிகள் எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று கூறவில்லை என்றால் நியாபகம் இல்லை. அசல் வழக்கிலும் பிரதிவாதி எந்த தேதி, மாதம் மற்றும் வருடத்தில் ஆக்கிரமிப்பு செய்தார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் அனுபவித்து வரும் சொத்திற்கும், தங்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும்,

பிரதிவாதிகள் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கு பக்கமும் பாதை உள்ளது. பிரதிவாதிக்கு குழந்தை இல்லாததால் அவரிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த பொய்யான வழக்கை அவர்கள் மீது போட்டதற்கு நீங்கள் நஷ்ட ஈடு தரவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. சுவாதீன பரிகாரம் கோரியதற்கான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விளம்புகை பரிகாரம் கேட்காமல், சுவாதீன பரிகாரம் மட்டும் கேட்டது தவறு என்றும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**//கையொப்பம்//**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**